“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்ட ‘கொரோனா வைரஸ் தொற்று 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்)’ என்று தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைத்துள்ளது என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

குறித்த விடயம் மீது நீதிபதிகள் மூவரைக் கொண்ட நீதிபதிகளின் குழாம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு நீதிபதிகள் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளார்கள்:-

குறித்த சட்டமூலத்தின் 12 ஆம் வாசகத்தில் உள்ள ‘கொவிட்-19 சூழ்நிலை’ என்பதன் வரைவிலக்கணத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டமூலத்தின் 2,3,4,6,7 மற்றும் 10 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 3 மற்றும் 4(இ) என்ற உறுப்புரைகளுடன் ஒவ்வாதுள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்பட்டு மக்களால் மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகரிக்கப்படலாம்.

எனினும், நீதிமன்றத்தால் கருத்துத் தெரிவிக்கப்பட்டவாறு 12 ஆம் வாசகத்தில் உள்ள ‘கொவிட்-19 சூழ்நிலை’ என்பதன் வரைவிலக்கணம் திருத்தப்பட்டால் ஒவ்வாமை இல்லாதொழியும் என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் 4 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 4(இ) என்ற உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 136 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட உத்தேச திருத்தத்தின் பிரகாரம் திருத்தப்பட்டால் மேற்படி வாசகத்தின் ஒவ்வாமை இல்லாதொழியும் என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் குறித்த சட்டமூலத்தின் 5,6,7 ஆம் வாசகங்கள் ஒவ்வாதுள்ளன என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரண்படவில்லை என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம். எனினும், குறித்த சட்ட மூலத்தின் 3(1) ஆம் வாசகம் தொடர்பாக நீதிமன்றத்தால் கருத்துத் தெரிவிக்கப்பட்டவாறு ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம்.

அடுத்த நீதிபதியின் தீர்மானம் பின்வருமாறு:-

குறித்த சட்டமூலத்தின் 12 ஆம் வாசகத்தில் உள்ள ‘கொவிட்-19 சூழ்நிலை’ என்பதன் வரைவிலக்கணத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டமூலத்தின் 2,3,4,6,7,8,9 மற்றும் 10 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 3 மற்றும் 4(இ) என்ற உறுப்புரைகளுடன் ஒத்துச் செல்கிறன என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

உப வாசகம் (ஆ) என்பது உப வாசகம் (இ) என்பதன் ஓர் உதாரணம் என்ற காரணத்தால் ‘கொவிட்-19 சூழ்நிலை’ என்பதன் வரைவிலக்கணம் எவ்வாறென்றாலும் திருத்தப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் 4 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 4(இ) என்ற உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 136 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம் என்பதுடன் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட முன்மொழியப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் திருத்தப்பட்டால் மேற்படி வாசகத்தின் ஒவ்வாமை இல்லாதொழியும் என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் குறித்த சட்டமூலத்தின் 5,6,7 மற்றும் 8 ஆம் வாசகங்கள் ஒத்துச் செல்கின்றன என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரண்படவில்லை என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானம் இன்றைய பாராளுமன்ற அமர்வு நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் என்று நான் கட்டளையிடுகிறேன்.”